**பாதஹேவாஹெட்ட பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதஹேவாஹெட்ட பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் பாதஹேவாஹெட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், முன்னைய ஆண்டில், என்னால்மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆகஸ்ட் முதல் கடந்த ஆண்டு செப்டம்பர் வரையான காலத்திற்குரியதாக மீளாய்வாண்டில், செலுத்தியிருந்த ரூபா 550,919 நிலுவை சம்பளத்தை மீளாய்வாண்டின் செலவினமொன்றாக மற்றும் மீள்நிரப்பு வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | ஆண்டிற்குரிய செலவுகளை மாத்திரம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | எதிர்வரும் ஆண்டில் தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 829,211 ஆன கடன் தவணையை நீண்ட கால பொறுப்பின் கீழ் ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டின் இறுதிக் கணக்கினூடாக சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | எதிர்வரும் ஆண்டில் செலுத்த வேண்டிய கடன் தவணையை நடைமுறை பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டும். |

#### 1.6.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாயவாண்டில் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 07 கணக்கு விடயங்களிற்குரிய கணக்குகள் பிரகார மீதி மற்றும் துணைப் பதிவேட்டு மீதிகளிற்கு இடையில் ரூபா 2,418,187 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | பதிவேடுகளை தயாரிக்கும் போது தவறுதலாக மீதி விடுபட்டுள்ளதாக மற்றும் ஏனைய பதிவேடுகளை பரீட்சித்து சரிசெய்வதென. | வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்மற்றும்முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள்என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| 158(1) பிரிவு | குறித்த அசைவற்ற அல்லது அசையும் ஆதனங்களை தடைசெய்து, அவற்றை விற்பனை செய்து ரூபா 5,401,447 ஆன நிலுவை வீதவரியை ஈடுசெய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | முதலாம் காலாண்டு முடிவடைய முன்னர் நடமாடும் சேவை நடாத்துதல் மற்றும் சிவப்பு கட்டளை அனுப்ப நடவடிக்கை எடுத்ததாகவும், ஆதனத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறதென. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுத்து குத்தகை பணத்தை அறவிட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 39,623,149 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 42,543,077ஆனது.

### 2.2 நிதி கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 130 பிரிவு பிரகாரம், பிரதேச சபையொன்றிற்கு கிடைத்து பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து பணமும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் ''பிரதேச சபை நிதியம்'' எனும் பெயருடைய கணக்கொன்றிற்கு செலவு வைக்க வேண்டிய போதும், பிரதேச சபையின் தெட்தொட்ட உப அலுவலகத்தில் திரட்டப்படும் வருமானத்தை வேறான சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 9,760,980 ஆன மீதியொன்று அக்கணக்கில் குறைபயன்பாட்டுடன் நிலவியது. | உத்தியோகபூர்வ நடைமுறை கணக்கிற்கு மாற்றி அத்தொகையை நிலையான வைப்பொன்றிற்கு வைப்புச் செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதென. | சபைக்கு சொந்தமான பணத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும் |

**2.3 வருமான நிருவாகம்**

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 5,971,994ஆன வீதவரி அறவிடப்பட்டிருக்காததுடன்,அம் மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய 29 அரச வீதவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 871,480 உம், 05 ஆண்டுகளிலும் அதிக காலமாக அலகொன்றின் நிலுவை ரூபா 10,000 இலும் விஞ்சிய 17 வீதவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 814,965 தொகை உள்ளடங்கியிருந்தன. | குறித்த நிறுவனங்களுக்கு நிலுவை மீதிகள் தொடர்பாக கடிதம், நினைவூட்டல் போன்று, 05 ஆண்டுகளில் அதிகமான நிலுவை மீதி தொடர்பாக விரிவான மீதிகள் பற்றி அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதுடன், அதிலிருந்து ரூபா 225,000 ஆன தொகையொன்று அறவிட்டுள்ளதென. | நிலுவை வீதவரி அறவிட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் 395 அலகுகளிலிருந்து அறவிட வேண்டியரூபா 1,301,342ஆன ஏக்கர் வரி அறவிடப்பட்டு இருக்காததுடன்,அம் மீதியினுள் 05 ஆண்டுகளிலும் அதிக காலமாக அலகொன்றின் நிலுவை ரூபா 1,000 இலும் விஞ்சிய 316 பேர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா 1,030,564 தொகை உள்ளடங்கியிருந்தன. | நீண்ட காலமாக ஏக்கர் வரி அறவிடப்படவில்லை எனவும், அதனால் போலியாக பில்லிடப்பட்ட கட்டணத்தை விடய பொறுப்பு அமைச்சரிற்கு அனுப்பியுள்ளதாகவும், அதன் பிரகாரம் ரூபா 621,167 பதிவழிக்க அனுப்பியுள்ளதாக மற்றும் எதிர்காலத்தில் நடமாடும் சேவை நடாத்தி நிலுவையை அறவிடுவதென. | நிலுவை ஏக்கர் வரி அறவிட வேண்டும். |
| **(ஆ)** | **நீர் வரி** | | |
| | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவியரூபா 16,937,738 ஆன நிலுவை நீர் கட்டண பெறுமதிலிருந்துஆண்டினுள்,ரூபா 14,706,833 தொகை அல்லது, 86 சதவீதம் அறவிடப்பட்டிருக்காததுடன்,செயலிழந்த நீர் கருத்திட்டம் ஒன்றின் ரூபா 1,351,613 ஆன நிலுவை மீதியிலிருந்து ஆண்டினுள் ரூபா 18,100 தொகை அல்லது, 01 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | கொவிட் தொற்று நிலைமை காரணமாக நடமாடும் சேவை மற்றும் நீர் தொடர்பை துண்டிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது போனதாக, எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கட்டணம் அறவிடுவதாக. | நிலுவை நீர் கட்டணம் அறவிட வேண்டும் |

**(இ) கடையறை வாடகை**

| | | |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான 06 இறைச்சிக் கடைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 720,228 உள்ளடங்களாக 84 கடையறைகளிலிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய நிலுவை கடை வாடகை ரூபா 1,396,710 ஆனதுடன், அத் தொகை அறவிடப்படவில்லை. | தற்போது அறவிடப்படாது இருக்கும் வாடகைகளுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், நிலுவை மீதிகள் அறவிடப்படுவதுடன், ஏனைய நிலுவை கடன் மீதிகளை அறவிட அறிவூட்டல் செய்யப்பட்டுள்ளதென. | நிலுவை கடையறை வாடகை அறவிட வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக முச்சக்கர வண்டி கட்டண வருமானம் ரூபா 563,400 ஆக மதிப்பிட்டிருந்து போதும், உள்ளவாறான வருமானம் ரூபா 106,300 அல்லது, மதிப்பிட்ட வருமானத்தின் 19 சதவீதமானதால், நிலுவை கட்டணம் அறவிட போதிய நடவடிக்கையொன்றை எடுத்திருக்காததுடன், நிலுவை முச்சக்கர வண்டி கட்டணத்திலிருந்து பதிவழிக்க இனங்கண்ட ரூபா 992,100 தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறையாக நடவடிக்கை எடுத்த போதும், நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக நிலுவை வருமானம் அறவிட முடியாது போனதென. | நிலுவை முச்சக்கர வண்டி கட்டணம் அறவிட வேண்டியமை மற்றும் பதிவழிக்க இனங்கண்ட மீதி தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்க வேண்டும். |